(ஆ) ஆம் எனில், வரும் நிதி ஆண்டிலாவது மேற்படி திட்டத்தை அமல் செய்ய மாற்று ஏற்பாடுகள் செய்யப் படுமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) அறியும்.

(ஆ) இத் திட்டத்தை செயல்படுத்துவதில் எதிர்நோக்கிய இடர்பாடுகளைக் களைந்து மானியத் தொகையையும் உயர்த்தி ஆணை ஒன்றை அரசு பிப்ரவரி திங்களில் பிறப்பித்துள்ளது.

**சந்தவாசல் கிராமத்தில் ஆதி திராவிட மாணவர் இல்லம் அமைத்தல்.**

வினா எண் 513—திரு. இல. பலராமன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு, போளூர் வட்டம், சந்தவாசல் கிராமத் தில் அரிசன மாணவர் விடுதி அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) வடாற்காடு மாவட்டம், போளூர் வட்டம், சந்தவாசல் கிராமத்தில் அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி அமைக்க இது வரையில் கோரிக்கை வரவில்லை.

(ஆ) இது குறித்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவ லரிடம் தொடர்பு கொண்டு தேவையையும் நிதி நிலையையும் முன்னிட்டு தக்க தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

**தீண்டாமை ஒழிப்புச் சட்டம்.**

வினா எண் 514—திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் 1980 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) இந்தச் சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப் படுவதாக அரசுக்கு ஏதேனும் புகார் வந்ததா?